# வாழ்க்கைத் தரம் உயர்ந்ததன் அனுபவக்கதை



ஜே.பி.மோகனவடிவேலு
திருசக்தி முற்றம் கீழவீதி
பட்டீச்சுரம் (அஞ்சல்)
அ.எண்.612703
தஞ்சாவூர் மாவட்டம்.

நான் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பட்டீச்சுரம் கிராமத்தை சேர்ந்த விவசாயி. எனக்கு நான்கு ஏக்கர் நஞ்சை நிலமும், இரண்டு ஏக்கர் தென்னந்தோப்பும், இரண்டு ஏக்கர் தோட்டமும் இருக்கின்றது. மேலும் எனக்கு ஒரு நெல் தரிசில் உளுந்து, பயிறும் சாகுபடி செய்வேன். தோட்டத்தில் ஒரு ஏக்கர் வாழையும் ஒரு ஏக்கர் கத்திரியும் சாகுபடி செய்து வருகின்றேன். கடந்த மூன்று மாதங்களுக்கு முன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் திரு.கே.நடராஜன் அவர்களின் ஆலோசனையின் படி என் வீட்டிலுள்ள கணினியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து காய், கனி மற்றும் பூக்களின் விலைப்பட்டியல் வெளியிடப்படும் இணையதளத்தை பயன்படுத்தி அன்றாட சந்தையில் காய்கறிகளின் விலையை குறிப்பாக திருச்சி மற்றும் பன்ருட்டி சந்தைகளின் விற்பனை விலைப்பட்டியலை தெரிந்துகொள்வேன்.

அதன்படி நான் தினந்தோறும் சந்தைக்கு எடுத்து செல்லும் கத்தரி, வாழை மற்றும் தேங்காய்களின் விலைகளை தெரிந்து கொண்டு, கும்பகோணம் நேரு மொத்த வருகின்றேன். என் கணினி மூலம் தெரிந்து கொள்ளும் மற்ற காய்கறி பயிர்களின் அன்றாட விலைப்பட்டியலை எங்கள் கிராமத்தில் காய்கறி பயிர் செய்துள்ள சிறு விவசாயிகளுக்கு தெரிவிக்கின்றேன்.

அதன்மூலம் அவர்களும் நல்ல பலனை அடைந்து வருகின்றனர். தற்போது திரு.நடராஜன் அவர்கள், என் கைபேசியில் தினந்தோறும் காய்கறி சந்தையின் திருச்சி மற்றும் பண்ருட்டி விலைகளை தெரிவித்து வருகின்றார்கள். மேலும் ஒருவிளை பொருளின் இரண்டு சந்தைகளின் விலைப்பட்டியலை நேரிடையாகபெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இத்தகைய முறை சிறப்பாக இருப்பதால் என் கிராமத்திலுள்ள மற்ற விவசாயிகளும் தங்கள் கைபேசியின் எண்களை திரு.நடராஜன் அவர்களிடமும் கொடுத்து காய்கறிகளின் திருச்சி மற்றும் பண்ருட்டி சந்தைகளின் அன்றாட விலைகளை பெற்று வருகின்றனர்.

மேலும் எங்கள் கிராமத்தைச் சுற்றியுள்ள சோழன்மாளிகை, ஆவூர், சுந்தரப்பெருமாள் கோயில், நடுப்படுகை மற்றும் நல்லூர் ஆகிய கிராமங்களில் விவசாயிகள் காய்கறிகள் வாழை, வெற்றிலை, தென்னை மற்றும் மலர்பயிர்கள் சாகுபடி செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு இந்த திட்டத்தில் சேர்ந்து பயன்பெற முயற்சித்துள்ளார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆகவே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் துவங்கியுள்ள இந்த பயனுள்ள திட்டம் தொடர்ந்து செயலாற்றி எங்களைப்போன்ற சிறு மற்றும் குறு விவசாயிகள் நல்ல பலனடையச் செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.